செய்தி வெளியீடு எண்: 200 நாள் 14.03.2008

# செய்தி வெளியீடு

சென்னையிலுள்ள சிறுமலர் பார்வையற்றோருக்கான மேல்நிலைப்பள்ளியில் 12–வது வகுப்பில் படித்து வரும் செல்வி. என்.எல்.பெனோ செபின் எனும் பார்வையற்ற மாணவி அமெரிக்காவில் ஜுன் 2008ல் நடைபெற இருக்கும் உலகளாவிய இளைய தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அழைப்பு பெறப்பட்டு இருந்தது.

இம்மாநாட்டில் கலந்து கொள்வதற்கு போதுமான நிதிவசதி இம்மாணவிக்கு இல்லாததால், நிதி உதவி கோரி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு விண்ணப்பித்தார்கள். 1.3.2008 அன்று அப்பள்ளிக்கு சென்றிருந்த அத்தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரும்மான மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் இதற்கான கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. அம்மனு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டது. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் பரிந்துரையின் பேரில் இதனைச் சிறப்பு நிகழ்வாகக் கருதி மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 4,70,000/– வழங்க அனுமதி அளித்து அதற்கான அரசு ஆணை வெளியிடப்பட்டது.

ரூபாய் 4,70,000/– தொகைக்கான வரைவு காசோலையை செல்வி என்.எல்.பெனோ செபின் என்ற பார்வையற்ற மாணவி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து இன்று (14.3.2008) தலைமைச்செயலகத்தில் பெற்றுக்கொண்டார்.

இதனால் அம்மாணவி உலகளாவிய சாதனையாளராக வர வாய்ப்பு ஏற்படுத்தி தரப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு பரிந்துரைத்து தொகையை பெற்றுத்தர உதவியமைக்காக செல்வி பெனோ மற்றும் அவரது பெற்றோர்கள் இன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து தனது நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

தனது பிறந்த நாளான 17.4.2008 அன்று தனது இல்லத்திற்கு வருகை தரவும் செல்வி பெனோ செபின் மாண்புமிகு அமைச்சரிடம் கேட்டுக் கொண்டார். அதன்படி அன்று மாலை நடைபெறும் பிறந்த நாள் விழாவிற்கு வருகை தரவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இசைவினை தெரிவித்தார்கள்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.